சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 20.02.2026 SC. 24/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr. பாரதி | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW 9 | | | |

---

<u>முதல் விசாரணை</u>

நான் தற்சமயம் பெரியகுளம் மாவட்ட அரசு தலைமை மருத்துவனையில் இரத்தமையத்தில் மூத்த குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 14.08.2020 அன்று கம்பம் அரசு மருததுவமனையில் பணி மருத்துவராக இருந்தபோது உதயகுமார் வயது 27, த/பெ செல்வம், வார்டு 1, விவேகானந்தர் தெரு, கம்பம் என்ற முகவரியல் இருந்து அவரை அவரது தாயார் வசந்தா என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அன்றைய தினம் முற்பகல் 10.55 மணியளவில் உதயகுமாரரை, கணேசன் என்ற தெரிந்த நபர் கூர்மையான ஆயுதத்தால் உதயகுமாரின் வீட்டிற்கு அருகில் தாக்கியதாக கூறி முற்பகல் 11.05 மணியளவில் அவசர சிகிச்சைக்காக வந்தார்கள். அவரை பரிசோதிக்கும்போது அவர் அரை மயக்கத்தில் சுயநினைவு இன்றி இருந்தார். பல்ஸ் நிமிடத்திற்கு 100, BP 80/60, oxygen செறிமானம் 91% இருந்தது. அதிகமான வேர்வை வந்து கொண்டிருந்தது. அவர் மது அருந்தவில்லை. 2 பெரிய காயங்கள் காணப்பட்டன. முதல் காயம், கழுத்தின் அடிப்பாகத்தில் முக்கால் வட்ட வடியில் கழுத்தை சுற்றி 12*5 செ.மீ. நீள, அகலத்தில் ஒரு ஆழமான காயம் இருந்தது. அந்த சமயம் கழுத்தின் உள்ளுறுப்புகள் அனைத்து வெளியே தெரிந்தன. அப்போது இரத்தம் அதிகமாக கசிந்து கொண்டிருந்தது. 2வது காயம், 3 நீளமான இணைகோடுகள் போல கீறல் அல்லது வெட்டுகாயங்கள் போல் முதுகில் 15செ.மீ. நீளத்திற்கு இருந்தன. அதில் அதிகமான இரத்தப்போக்குகள் இல்லை. அவர் முதலுதவி செய்து, வெட்டு காயங்களுக்கு Dressing செய்யப்பட்டு ஆக்ஸிஜன் மற்றும் IV கொடுக்கப்பட்டது. நோயாளி மேல்சிசிக்சைக்காக தேனி மருத்துவமனை மருத்துவகல்லூரிக்கு பரிந்துரை செய்யப்பட்டார். பின்னர் 31.10.2020 அன்று மேல்சிகிச்சை செய்த தேனி மருத்துவகல்லூரி மருத்துவரின் பரிந்துரையில் பெயரில் காயம் பட்ட நபருக்கு கழுத்தில் பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். அது அ.சா.ஆ.6 ஆகும். வழக்கு சம்பந்தமாக கம்பம் வடக்கு காவல் ஆய்வாளர்

என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

விபத்து பதிவேட்டு நகலில் காயம் பட்ட நபர் அவரது வீட்டிற்கு அருகில் வைத்து தான் சம்பவம் நடைபெற்றது என சொன்னால் என்றால் சரிதான். அவர் சிகிச்சைக்கு வரும்போது எந்த ஆயுதத்தால் தான் தாக்கப்பட்டேன் என்ற விவரத்தை சொல்லவில்லை. ஆனால் காயங்களை வைத்து பார்க்கும்போது அது கூர்மையான ஆயுதம் தான். சம்பவம் இரவில் நடைபெற்றதா அல்லது பகலில் நடைபெற்றதா என்று போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் பகலில் தான் நடைபெற்றது. சம்பவம் இரவில் நடைபெற்றதாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இரவு என 161 statement ல் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. தவறை திருத்தவது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இரண்டு நாட்கள் முன்னர் தான் அதை பார்த்தேன். இரண்டு சக்கர வாகனத்தில் சென்று கீழே விழும்போது காயம் பட்ட நபருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு இல்லை. கூர்மையான பாட்டிலின் மீது விழுந்தால் காயம் பட்ட நபருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு இல்லை. நான் சொல்வது போல் பிறை போன்ற கூர்மையான ஆயுதம் மீது விழும்போது காயம் பட்ட நபருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு இல்லை. காயம் பட்ட நபர் தேனி அரசு மருத்துவமனையில் 14 நாட்கள் உள்நோயாளியாக இருந்துள்ளார். நான் காயம் சம்பந்தமாக காயம் பட்ட நபருக்கு கொடுங்காயம் என சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் மனித உயிருக்கு தீங்கு ஏற்படும் என்பதால் கொடுங்காயம் என சான்று வழங்கப்பட்டுள்ளது. நான் வழங்கிய காயச்சான்று மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றும், அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்).M. சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி
உத்தமபாளையம்